LIBRARY, STATE LEGISLATURE
19 MAY 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, the 21st January 1964

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Strikes and lock-outs

* 43 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) the total number of strikes and lock-outs in the State during the period of emergency up-to-dat;

(*b*) the total number of strikes and lock-outs in the textile industry alone during the same period; and

(*c*) the total number of man-days lost in the textile industry due to strikes and lock-outs?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The number of strikes and lock-outs from 26th October 1962 to the end of September 1963 is 136.

(*b*) The number of strikes and lock-outs in the textile industry alone during the above period is 80.

(*c*) The total number of man-days lost in the textile industry alone during the said period is 279,036.

திரு. செ. மாதவன்: இதுபோன்ற வேலை நிறுத்தங்கள் வராமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது? உதாரணமாக, உயர்நீதி மன்றம் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவரை திரும்ப எடுக்கவேண்டுமென்று சொன்னால், அவரை எடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டால், அதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது என்பது உண்மையா? அப்படியானால் சட்டத்தை மாற்றியமைக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைத் தவிர்ப்பதற்கு, கூடிய வரை சுமுகமான முறையிலே தகராறுகளைத் தீர்த்துவிடவேண்டுமென்பதுதான் அரசாங்கம் கையாளுகிற முறை. அதைத் தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி, அவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அந்த வகையிலே கன்ஸிலியேஷன் முறை, ஆர்ப்பிட்ரேஷன் முறை அதிகமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதிலும் முடியவில்லை என்றால், வழக்கு கோர்ட்டுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. காரணம் இல்லாமல் கூட வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. கன்ஸிலியேஷனுக்கு அனுப்பிய

10 MAY 1964

பிறகுகூட வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இதை எல்லாம் தவிர்ப்பதற்குத் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பும், தொழிலதிபர்களுடைய ஒத்துழைப்பும் அவ்வப்போது கோரப்பட்டு வருகிறது. தொழில் தகராறு ஏற்பட்டு, அதன்மீது தீர்ப்பு ஏற்பட்டு அதை நிறைவேற்றவில்லை என்றால், நிறைவேற்றத் தவறுகின்றவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: அந்தத் தீர்ப்பை நிறைவேற்ற எந்த முதலாளியாவது மறுத்தால், அப்படி வேலையிலிருந்து நீக்கப்பட்டவரை, திரும்ப அவரை எடுத்துத்தான் தீரவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா? அப்படியில்லாவிட்டால், அந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் முயலுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பே கூறியதுபோல, தகராறைத் தொழில் கோர்ட்டுக்கு விட்டு, தொழில் கோர்ட் தீர்ப்பு ஏற்பட்டால், அந்தத் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றத் தவறினால், அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: நடவடிக்கை எடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? வேலையிலிருந்து நீக்கப்பட்டவரை திரும்ப எடுக்க வேண்டுமென்று அவற்புறுத்துன்றார்களா? தவறியவர்கள் மீது என்ன நடக்கையை அரசாங்கம் எடுக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மறுபடியும் கூறுகிறேன். தகராறு ஏற்பட்டு, தொழில் கோர்ட்டுக்கு விடப்பட்டு, அந்தக் கோர்ட் தீர்ப்புக் கொடுத்து, அதை நிறைவேற்றத் தவறினால் தவறியவர்கள் மீது பிராசிக்யூஷன் தொடரப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து: நெருக்கடி நிலைமையில் இம்மாதிரிக் கதவடைப்புகள் உற்பத்தியைப் பாதிக்கிற காரணத்தால், அப்படி நேராமல் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நெருக்கடி நிலையில் உற்பத்தி பாதிக்கப்படக் கூடாது என்பதால், அவ்விஷயமாக அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தொழிலதிபர்கள் பிரதிநிதிகளையும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும் கூட்டி, கூடியவரை சமரசமாக முடிவு செய்துகொள்ள வேண்டுமென்று, அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதை மீறி தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் தகராறுகளை ஏற்படுத்துகிறார்கள். அதனால்தான் ஸ்டிரைக் ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அவ்வப்போது அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: முதலாளிகள் இவ்வாறு வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு, நீதி

21st January 1964]

மன்றத்தின் தீர்ப்பை அமல் நடத்தாமல் செய்வதற்கு இப்பொழுது இடம் இருக்கிறதா? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எ. பக்தவத்சலம்: சட்டத்தில் அதற்கு இடமில்லை. சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டால், அதற்குக் குறுக்கே அரசாங்கம் நிற்பதற்கில்லை.

* 44 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) The reasons for the Armed Police entering Kothari, Vasantha and Rajalaxmi Mills at Coimbatore on 8th November 1963 and resorting to lathi-charge on the workers;

(*b*) the number of workers who received injuries due to the lathi-charge;

(*c*) whether any enquiry was conducted on the Police excesses; and

(*d*) if so, the findings of the enquiry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) On 8th November 1963, the workers of the Vasantha and the Kothari Mills who resorted to a stay-in-strike demanding increased bonus surrounded the managerial staff of these mills without allowing them to move about. On written complaints from the managements of these mills, the Police intervened and chased away the workers and set free the managerial staff. There was however, no lathi-charge as alleged. The Police never entered the Rajalaxmi mills.

(*b*) *to* (*d*): Do not arise.

Hindi Pandits

* 48 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state whether the benefits of the G.O. Ms. No. 2640, Education, dated 25th October 1962, will be extended to the first grade Hindi Pandits who have passed B.A. and B.T. examinations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The matter is under the consideration of the Government.

திரு. செ. மாதவன்: இந்தி ஆசிரியர்களை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வைக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா? அப்படியிருந்தால், அந்த இந்தி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் ஒரு பகுதி மத்திய அரசாங்கத்திலிருந்து நமது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹிந்திப் பண்டிதர்களுக்குத் தகுதியிருந்தால், தலைமை ஆசிரியர் பதவிக்குக் கருதப்படலாமா என்பதுதான் கேள்வி. எங்கெங்கே ஹிந்தி ஆசிரியர்களுக்குத்